**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **S.T.C.No. 10 /2025, Kunnam P.S. PW -1.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஜாலின் | Nationality | : | இந்தியன் |
| Father/ Husband Name | : | ஷாம் அருள்மணி | Occupation | : | டிரைவர் |
| Village | : | கிழக்கு தாராவளை, | Religion | : | - |
| Taluk | : | கன்னியாகுமரி மாவட்டம். | Age | : | 33 /2025 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.11.2025 | | | | | |

எதிரி ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து, தற்போது தனியார் நிறுவனத்தில் பேருந்து ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரி என்னுடன் பேருந்தை ஓட்டிய ஓட்டுனர் ஆவார். கடந்த 2024 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஒருநாள் தேதி மாதம் ஞாபகம் இல்லை. திருவனந்தபுரத்தில் அரசு விரைவுப்போக்குவரத்து கழகத்தில் தற்காலிக ஓட்டுனராக பணிபுரிந்து வந்தேன். திருவனந்தபுரத்தில் இருந்து சென்னைக்கு பேருந்து ஓட்டுநராக நானும் என்னுடன் மோரிஸ் என்பவரும் அரசு பேருந்தை திருவனந்தபுரத்தில் பேருந்தை எடுக்கும்போது நான் இ யக்கி கொண்டு வந்தேன். சமயபுரம் டோல் கேட்டில் இருந்து எதிரி மோரிஸ் பேருந்தை ஓட்டினார். அப்போது நான் நான் பின் இருக்கையில் தூங்கி கொண்டு வந்தேன். அவர் ஓட்டி வரும்போது மங்களமேடு அருகே டிப்பர் லாரி மீது பின்புறம் எங்கள் பஸ் மோதிவிட்டது, சத்தம் கேட்டு நான் எழுந்து பார்த்தேன்.

2. நாங்கள் வந்து பேருந்தின் முன்னாடி இருந்த கண்ணாடி உடைந்து விட்டது. ஓட்டுனர் மோரிசுக்கு காலில் அடிப்பட்டிருந்தது. காயம்பட்ட ஓட்டுநரை ஆம்புலன்ஸ் மூலமாக பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நாங்கள் ஓட்டிவந்த பேருந்தின் பதிவு எண் தெரியாது, டிப்பர் லாரியின் பதிவு எண்ணும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகாரில் உள்ள அ.சா.1 ன் கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகாரை யார் எழுதினார்கள் என்று தெரியாது. புகாரில்

DMCUMJM COURT, KUNNAM

உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. நான் தூங்கி கொண்டிருந்ததால் விபத்து எப்படி ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. விபத்து சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :–

1. நான் தற்போது நீதிமன்றத்தில் சொன்ன விபரங்களை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் தூங்கி கொண்டு வந்ததால் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் தூங்கி கொண்டு வந்ததால் எதிரிதான் இந்த விபத்தை ஏற்படுத்தினார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரிதான். இந்த விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. போலிசார் காட்டிய புகாரில் கையெழுத்து மட்டும் தான் போட்டேன் என்றால் சரிதான்.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUMJ COURT, KUNNAM